# இபாதத் ~ 04


- ஒரு முஸ்லிமுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள பொறுப்புக்கள் மூன்று.


இபாதத் → அல்லாஹ்வை வணங்கி வழிபடுதல்.

இமாரத் → பூமியை வளப்படுத்தல்.

கிலாபத் → பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருந்து அதனை நிர்வகித்தல்.

இபாதத் →
- கீழ்ப்படிதல்.
- வணங்குதல்.
- வழிபடுதல்.


பொறுமை, தியாகம் போன்ற நற்பண்புகளை வளர்த்தல்.
பாவங்களைத் தவிர்த்தல்
இபாதத்தின் நோக்கம்
அல்லாஹ்வுடனான நெருக்கத்தை ஏற்படுத்தல்
இறை திருப்தியைப் பெற்று சுவனம் நுழைய வழியமைத்தல்
உள்ளத்தைப் பக்குவப்படுத்தி இறையச்சத்தை ஏற்படுத்தல்.


இபாதத்
பர்ளு
ஸுன்னத்
பர்ளு ஐன்
பர்ளு கிபாயா

**பர்ளு ஐன் :-** ஒவ்வொரு முஸ்லிமும் கட்டாயம் செய்ய வேண்டியவை ( தனிக்கடமை )

உதாரணம் :
- ஐவேளைத் தொழுகை
- றமழான் மாத நோன்பு
- குடும்பப் பராமரிப்பு
- பெற்றோரை மதித்தல்

**பர்ளு கிபாயா :** சமூகத்தில் ஒரு சிலர் நிறைவேற்றுவதால் ஏனையோர் மீதுள்ள கடமை நீங்கிவிடும். (பொதுக் கடமை)

உதாரணம் :
- ஜனாஸாவின் கடமைகள்.
- துறைசார் நிபுணர்களை உருவாக்குதல்.
- மார்க்க அறிஞ்ஞர்களை உருவாக்குதல்.

## ஸுன்னத்

**பர்ளுகளில் அடங்காத வணக்க வழிபாடுகள்.**

உதாரணம் :
- திக்ர்
- சுன்னத்தான தொழுகைகள்
- ஸலாம் கூறுதல்

## இபாதத்தின் பிரிவுகள்

### அடிப்படை இபாதத்

உதாரணம் :
- தொழுகை
- ஸகாத்
- நோன்பு

### அன்றாட நடவடிக்கைகள்

உதாரணம் :
- உறங்குதல்.
- உண்ணல்.
- தொழில் செய்தல்

## ➢ அடிப்படை வணக்கங்கள் 4 வகைப்படும்

1. உடலோடு தொடர்புடையவை.
   உதாரணம் : ஹஜ், தொழுகை, நோன்பு
2. உள்ளத்தோடு தொடர்புடையவை.
   உதாரணம் : இஹ்லாஸ், பொறுமை
3. செல்வத்தோடு தொடர்புபட்டவை.
   உதாரணம் : ஸகாத், ஸதகா, குர்பான்
4. வார்த்தையோடு தொடர்புபட்டவை.
   உதாரணம் : திக்ர், குர்ஆன் ஓதுதல்

## ❍ அன்றாட நடவடிக்கைகள் இபாத்தாக அமையத் தேவையான நிபந்தனைகள்

1) ஷரீஆவின் அனுமதி.
2) தூய எண்ணம் (இஹ்லாஸ்).
3) ஷரீஆவின் வரையறைகளை மீறாதிருத்தல்.
4) அடிப்படை வணக்கங்களுக்கு தடையாக அமையாதிருத்தல்.
5) நேர்த்தியும் ஒழுங்கும்.

## ❖ ஸுன்னத்துக்களை நிறைவேற்றுவதால் அடையும் பயன்கள்.

01. அதிக நன்மைகளை பெறல்.
02. இறை நெருக்கம் அதிகரித்தல்.
03. பர்ளான இபாதத்துகளில் இடம்பெறும் குறைகளை நிவர்த்தி செய்யப்படல்.